பிரசார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

06 10 2026 TUESDAY 06 45 AM

வணக்கம் - மாநில செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

- இந்தியாவுக்கான முக்கிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு நட்புறவு நாடாக சுவிட்சர்லாந்து திகழ்கிறது என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு கூறியுள்ளார்.
- கலப்படம் செய்யப்பட்ட பொருட்களுக்கு எதிராக சிறப்பு தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மாநில அரசுகளை இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.
- மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளில் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.
- கோவை மாவட்ட மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.
- இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி லக்னோவில் இன்று நடைபெறுகிறது.

>>>>>><<<<<<

இந்தியாவுக்கான முக்கிய வர்த்தகம் மற்றும் முதலீட்டு நட்புறவு நாடாக சுவிட்சர்லாந்து திகழ்கிறது என்று குடியரசுத்தலைவர் திருமதி. திரௌபதி முர்மு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் குடியரசுத்தலைவர் மாளிகையில் ஸ்விட்சர்லாந்து அதிபர் திரு. Guy Parmelin-னுக்கு அளிக்கப்பட்ட விருந்து நிகழ்ச்சியின்போது அவர் இதனை தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்தியா - ஐரோப்பிய யூனியன் இடையேயான தடையற்ற வர்த்தக ஒப்பந்தம் மூலம் இருதரப்பு வர்த்தகம் மற்றும் முதலீட்டை மேலும் விரிவுபடுத்துவதற்கு அதிக வாய்ப்புகள் உள்ளதாக அவர் கூறினார்.

ஸ்விட்சர்லாந்து நாட்டு நிறுவனங்கள், இந்தியாவில் முக்கிய துறைகளில் முதலீடு செய்துள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

குறிப்பாக, சாலைகள், ரயில்வே பாலங்கள், சுரங்கப்பாதைகள் கட்டுமானம் ஆகியவற்றில் அவை முக்கியப் பங்களிப்பை கொண்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

தூய்மை மற்றும் பசுமை தொழில்நுட்பம், செயற்கை நுண்ணறிவு தொழில்நுட்பம் ஆகிய துறைகளில் உள்ள வாய்ப்புகள் குறித்து கண்டறியலாம் என்றும் அவர் கூறினார்.

அறிவியல், தொழில்நுட்பம், புதுமை கண்டுபிடிப்பு, கலாச்சாரம், மக்களுக்கு இடையேயான தொடர்புகள் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இருநாடுகளும் விரிவான ஒத்துழைப்பை கொண்டுள்ளதாக குடியரசுத்தலைவர் தெரிவித்தார்.

இந்தியா-ஸ்விட்சர்லாந்து இடையேயான நெருங்கிய ஒத்துழைப்பு இருநாட்டு மக்களுக்கும் பெரும் பயனளிக்கும் என்று குடியரசுத்தலைவரும், ஸ்விட்சர்லாந்து அதிபரும் தெரிவித்தனர்.

>>>>>><<<<<<

எதிர்வரும் பண்டிகை காலங்களில் கலப்படம் செய்யப்பட்ட மற்றும் பாதுகாப்பற்ற உணவு பொருட்களுக்கு எதிராக சிறப்பு தடுப்பு நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேச அரசுகளை இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம் கேட்டுக் கொண்டுள்ளது.

இதுதொடர்பாக, அனைத்து மாநிலங்களின் உணவுத்துறை ஆணையர்களுக்கு அந்த ஆணையம் கடிதம் எழுதியுள்ளது.

பால் மற்றும் பால் பொருட்கள், இனிப்பு, சிற்றுண்டி வகைகள் உள்ளிட்ட கலப்படம் செய்யப்பட்ட, போலியான, பாதுகாப்பற்ற உணவுகளின் விற்பனையை தடுக்க தீவிர கண்காணிப்பை மேற்கொள்ள வேண்டும் என்று அது வலியுறுத்தியுள்ளது.

உணவின் தரம் குறித்த பரிசோதனையை எளிதாக்க, முக்கிய சந்தைப் பகுதிகளில் வாகனங்களில் பரிசோதனை மேற்கொள்வதற்கான வசதியை பயன்படுத்த வேண்டும் என்று இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தர நிர்ணய ஆணையம், மாநில அரசுகளை கேட்டுக் கொண்டுள்ளது.

>>>>>><<<<<<

மதுராந்தகம், தாராபுரம் சட்டப்பேரவை தொகுதிகளில் இடைத்தேர்தலுக்கான வாக்குப்பதிவு இன்னும் சற்றுநேரத்தில் தொடங்குகிறது.

காலை 7 மணிக்கு தொடங்கும் வாக்குப்பதிவு மாலை 6 மணிவரை நடைபெறவுள்ளது.

தாராபுரம் தொகுதியில் மொத்தம் 320 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

முன்னதாக, அத்தொகுதியில் மாதிரி வாக்குப்பதிவு நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சபரிஷ் 54 செகண்ட்ஸ்)

மதுராந்தகம் சட்டப்பேரவை தொகுதியில் மொத்தம் 285 வாக்குச்சாவடிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

இதேபோல், அத்தொகுதியிலும் மாதிரி வாக்குப்பதிவு நடைபெற்றதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

(வாய்ஸ் பைட் - சுரேகா 45 செகண்ட்ஸ்)

மதுராந்தகம் தொகுதியில் மாற்றுத் திறனாளிகளுக்கான வசதிகள் செய்யப்பட்டுள்ளதாகவும், போதிய பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் திரு. வீரப்பன் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

(வாய்ஸ் பைட் - ஆட்சியர் 51 செகண்ட்ஸ்)

இந்த இரண்டு தொகுதிகளிலும் பதிவான வாக்குகளின் எண்ணிக்கை வரும் 9ஆம் தேதி மேற்கொள்ளப்படுகிறது.

>>>>>><<<<<<

சென்னையில் பணிநிரந்தரம் உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி, போராட்டம் நடத்தி வரும் செவிலியர்கள் சங்க நிர்வாகிகளை தமிழக அரசு உடனடியாக அழைத்துப் பேச வேண்டும் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மாநிலச் செயலாளர் திரு. வீரபாண்டியன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து, அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், கோரிக்கைகளை வலியுறுத்தி போராடும் செவிலியர்களை அழைத்துப் பேசாமல், அவர்களை கைது செய்வது போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது சரியான அணுகுமுறை அல்ல என்று தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<<

தமிழகத்தில் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகள், நீலகிரி, தேனி, கிருஷ்ணகிரி மற்றும் தருமபுரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் இன்று கனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

திருப்பூர், ஈரோடு, சேலம், கரூர், தென்காசி உள்ளிட்ட பெரும்பாலான மாவட்டங்களில் மிதமான மழை பெய்யக்கூடும் என்று கூறப்பட்டுள்ளது.

ஓரிரு இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இரண்டு முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை, இயல்பை விட அதிகமாக இருக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

இருவரிச் செய்திகள்

கருங்கடலில் வர்த்தக கப்பல் மீது நடத்தப்பட்ட தாக்குதலில் இரண்டு வெளிநாட்டவர்கள் உயிரிழந்ததாகவும், 3 இந்தியர்கள் பாதுகாப்புடன் இருப்பதாகவும் ருமேனியாவில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

அமெரிக்காவில் மத்திய அமைச்சர் திரு. பியூஷ் கோயல், அந்நாட்டு தொழில்துறை தலைவர்களுடன் ஆலோசனை நடத்தினார்.

>>>>>><<<<<<

சுதந்திரம் அடைந்த பின்னர் முதன்முறையாக அஸ்ஸாமிலிருந்து பங்களாதேஷ்-க்கு கப்பல் சரக்கு போக்குவரத்து நேற்று தொடங்கியது.

>>>>>><<<<<<

கோவா சட்டப்பேரவையின் வெள்ளிவிழாவை ஒட்டி, இன்று முதல் நான்கு நாட்களுக்கு பல்வேறு நிகழ்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

>>>>>><<<<<<

பஞ்சாப், ஹரியானா மாநிலங்களில் வைக்கோல் கழிவுகள் எரிக்கப்படுவதை கண்காணிக்கும் வகையில், பறக்கும் படைகள் நியமிக்கப்பட்டுள்ளன.

>>>>>><<<<<<

திருப்பத்தூர் மாவட்டத்தில், வரும் 10ஆம் தேதியன்று வேலைவாய்ப்பு முகாம் நடைபெறவுள்ள நிலையில், அதுகுறித்த விழிப்புணர்வு வாகன பிரச்சாரத்தை ஆட்சியர் திரு. நல்லசிவன் தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

திண்டுக்கல், தேனி மாவட்ட அடித்தட்டு மக்களின் வாழ்வாதார முன்னேற்றத்திற்காக பாடுபட்ட இங்கிலாந்தைச் சேர்ந்த ஜேம்ஸ் கிம்டன் பாதிரியாரின் நினைவு நாளையொட்டி, கிராம மக்கள் முளைப்பாரி எடுத்து, மரியாதை செலுத்தினர்.

>>>>>><<<<<<

வேலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் பேரிடர் மீட்பு ஒத்திகை பயிற்சியை, ஆட்சியர் திருமதி. லீலா அலெக்ஸ் தொடங்கி வைத்தார்.

>>>>>><<<<<<

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலில் கடந்த 24 நாட்களில் ஒரு கோடியே 37 லட்சம் ரூபாய் அளவிற்கு உண்டியல் காணிக்கை கிடைத்துள்ளதாக கோவில் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<<

வடகிழக்கு பருவமழையை முன்னிட்டு, பெருநகர சென்னை மாநகராட்சி பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டுள்ள முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் தொடர்பாக துறை அலுவலர்களுடன் நகராட்சி நிர்வாக கூடுதல் தலைமைச்செயலாளர் திரு. ககன்தீப் சிங் பேடி ஆய்வு மேற்கொண்டார்.

>>>>>><<<<<<

விளையாட்டுச் செய்திகள்

இந்தியா - வெஸ்ட் இண்டீஸ் அணிகளுக்கு இடையேயான முதலாவது டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

லக்னோவில் இப்போட்டி இரவு 7 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

இந்தியா ஏ - ஆஸ்திரேலியா ஏ அணிகளுக்கு இடையேயான முதலாவது ஒருநாள் கிரிக்கெட் போட்டி இன்று நடைபெறுகிறது.

புதுச்சேரியில் இப்போட்டி பிற்பகல் 2 மணிக்கு தொடங்குகிறது.

>>>>>><<<<<<

அர்ஜென்டினா சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் Diva Bhatia காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

மகளிர் ஒற்றையர் பிரிவு முதல்சுற்று ஆட்டத்தில் அவர் 6-4, 6-3 என்ற செட்கணக்கில் அமெரிக்காவின் Isabella-வை வென்றார்.

>>>>>>END<<<<<<